# சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

## கலை மற்றும் பண்பாடு
## அருங்காட்சியகங்கள்
## தொல்லியல்

## மானியக் கோரிக்கை எண்-29

# அறிவிப்புகள்
# 2012-2013

**என். ஆர். சிவபதி**
பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத்துறை அமைச்சர்

# கலை மற்றும் பண்பாடு அருங்காட்சியகங்கள் தொல்லியல்

## அறிவிப்புகள் 2012 – 2013

### 1. சேலத்தில் ஒருங்கிணைந்த கலை பண்பாட்டு மைய கட்டிடம் கட்டுதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சேலம் மண்டலத்திற்கான மண்டல உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட அரசு இசைப்பள்ளி, சவகர் சிறுவர் மன்றம், நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் ஆகியவை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கலை பண்பாட்டு மைய கட்டிடம் ஒன்று சேலத்தில் ரூ.1.00 கோடி செலவில் கட்டப்படும்.

## 2. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், அரசு இசைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்த, தற்பொழுது மாதந்தோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை ரூ.250/– லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி 2012–13 ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும். மேலும், 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்த, தற்பொழுது மாதந்தோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை ரூ.200/– லிருந்து ரூ.400/– ஆக உயர்த்தி 2012–13 ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும்.

## 3. சிறுவர் அருங்காட்சியகத்தில் காட்சியமைப்பு மற்றும் பார்வையாளர்கள் வசதிகளை மேம்படுத்துதல்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, சென்னை அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள சிறுவர் அருங்காட்சியகத்தை புதுப்பித்தல், காட்சியமைப்பு பணிகளை மேம்படுத்துதல் மற்றும் பார்வையாளர்கள் வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.50.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 4. சென்னை அருங்காட்சியகத்தில் தாவரவியல் காட்சிக் கூடங்களை புத்தாக்கம் செய்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சென்னை அருங்காட்சியக தாவரவியல் காட்சிக் கூடங்கள் ரூ.27.00 இலட்சம் செலவில் புதிய காட்சியமைப்பு முறைப்படி நவீனப்படுத்தப்படும்.

## 5. கரூர் மற்றும் வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகங்களைப் புதுப்பித்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அரசு மாவட்ட அருங்காட்சியகங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு கரூர் மற்றும் வேலூர் மாவட்ட அருங்காட்சியகங்களில் பார்வையாளர்களுக்கான வசதிகள், காட்சியமைப்பில் மேம்பாடுகள் செய்தல் போன்ற வளர்ச்சிப் பணிகள் ரூ.10.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

6. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில், பூம்புகாரில் உள்ள ஆழ்கடல் அகழ்வைப்பக கட்டட கட்டுமானப் பணிகள் ரூ.35.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

7. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** உலகப் பாரம்பரிய சின்னமாக விளங்கும் மாமல்லபுரத்தின் பாரம்பரியத்தினை பேணிப் பாதுகாக்க மாமல்லபுரம் உலக மரபுப்பகுதி மேலாண்மை அதிகாரச் சட்டம் (The Mamallapuram World Heritage Area Management Authority Act) இயற்றப்படும்.

**என். ஆர். சிவபதி**
பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத்துறை அமைச்சர்